# பொதுக்காலம் 20ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

நம்மைத் தேடி மீட்க வந்த இயேசு அனைவருக்கும் சொந்தம். அவர் மேல் நம்பிக்கை கொண்ட மக்களினமாக வாழ இன்றைய பொதுக்கால இருபதாம் ஞாயிறு வழிபாட்டுக் கொண்டாட்டம் நம்மை வரவேற்கின்றது.

தங்களை முதன்மைப்படுத்தி மற்ற இனத்தவர்களையும், சமயத்தவர்களையும் பிரித்துப் பார்க்கும் குறுகிய பார்வையில் இருந்த இஸ்ரயேல் மக்களைக் கண்டு வருந்திய இயேசு, புற இனத்துக் கனானியப் பெண்ணின் தளராத விசுவாசத்தைக் கண்டு பெருமிதம் கொள்கின்றார்.

உண்மையானதும், நன்மையானதும் எங்கிருந்து வந்தாலும் இயேசு அதை காணவும், போற்றவும் தவறியதே இல்லை.

இஸ்ரயேல் குலத்தாருள் காணாமல் போன ஆடுகளாய் இருப்பவரிடமே அனுப்பப்பட்டேன் என்று இயேசு அந்த கனானியப் பெண்ணிடம் கூறிய போதிலும் அப்பெண்ணினுடைய பணிவையும், நம்பிக்கையையும் பாராட்டி அம்மா உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும் என்கிறார். அப்பெண்ணின் நம்பிக்கை அவரது மகளுக்கு வாழ்வைப் பெற்று தந்தது.

“கடவுள் வேறுபடுத்திப் பார்க்காமல் அனைவருக்கும் இரக்கம் காட்டுபவர்” எங்கிறார் புனித பவுலடியார்.

மனிதர்களாகிய நாம் நம்மிடமே கொண்டுள்ள குறுகிய எண்ணங்களையும், குறுக்குப் புத்திகளையும் அகற்றி, யாரையுமே புறக்கணிக்காமல் அனைவரையுமே ஏற்று வாழும் வரம் வேண்டுவோம்.

என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய “இறைமன்றாட்டின் வீடு” என்று கூறும் ஆண்டவரின் அழைப்பை ஏற்று நம் வாழ்விலே பணிவோடும் இறை நம்பிக்கையோடும் வாழ்கின்ற வாஞ்சையோடு இன்றைய பலியிலே இணைவோம்.

**நன்றி: ஆசிரியை திருமதி. லூயிஸ் ரெக்ஸ்லின், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com